திரு. சு. பவுன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வானகிரி கிராமத்தில் ரூ.34 கோடி செலவில் கடலரிப்பைத் தடுப்பதற்குத் தடுப்புச் சுவர் அமைக்கும் பணிக்கு ஆணைகளைப் பிறப்பித்து, பணிகள் துவங்கப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—45

என்னுடைய தொகுதிக்குட்பட்ட காலமநல்லூர் ஊராட்சிக்கு உள்ளடங்கிய சின்னமேடு என்கின்ற மீனவக் கிராமத்திலே சுமார் 800 மீட்டர் நீளத்திற்கு கடலரிப்பு ஏற்பட்டு, கடல் நீர் கிராமத்தில் உட்புகும் சூழ்நிலை உள்ளது. கருணை உள்ளத்தோடு அனைத்து பகுதிகளுக்கும் வாரி வழங்கிக் கொண்டிருக்கின்ற, மீனவ சமுதாயத்தின் விடிவெள்ளியாக இருக்கின்ற எங்கள் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை எடுத்துச்சென்று, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கடலரிப்பைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 329, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

329—

கால்நடைக் கிளை நிலையம்

***5284—திரு. எல். வெங்கடேசன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2013 ஏப்ரல் 26]

திருக்கோவிலூர் தொகுதி, திருக்கோவிலூர் வட்டம், பெண்ணைவலம் கிராமத்தில், கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருக்கோவிலூர் வட்டம், திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்திலே பெண்ணைவலம் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். பொதுவாக 3,000 கால்நடைகள் இருந்தாலே அங்கே கிளை நிலையம் அமைத்துத் தரப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கிராமத்தில் ஏறக்குறைய 7,000 கால்நடைகளுக்கு மேல் இருக்கின்ற காரணத்தினால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அங்கே கிளை நிலையம் அமைப்பது குறித்து பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.*

திரு. எல். வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணைவலம் கிராமத்தைச் சுற்றி எட்டு கிராமங்கள் இருக்கின்றன. கொணலவாடி, அமாவாசைப்பாளையம், கொண்டசமுத்திரபாளையம், பூசாரிப்பாளையம், டி.கொளத்தூர், டி.கொடியூர், டி.குன்னத்தூர் போன்ற எட்டு கிராமங்களில் 9,692 கால்நடைகள் இருக்கின்றன. அதேசமயத்தில் குறிப்பாக கொடியூர், குன்னத்தூர் ஆகிய இரண்டு கிராமங்களில் 2,000–க்கும் மேற்பட்ட வெள்ளாடுகள் இருக்கின்றன. இந்தப் பகுதியிலே கால்நடைகளுக்கு ஏதாவது நோய் ஏற்படுகிறது என்று சொன்னால், அங்கேயிருந்து, திருக்கோவிலூர், சித்தலிங்கமடம், இளந்திரை போன்ற கிராமங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கின்ற காரணத்தால், கூடிய விரைவிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெண்ணைவலம் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க முன்வர வேண்டுமென்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2013 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியில் கால்நடைக் கிளை நிலையம் தேவை என்பதைத் துறையும் அறிந்திருக்கின்றது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று கால்நடைக் கிளை நிலையங்கள் அமைக்கப்படும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 330, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

330—

வரி குறைப்பு

***19837—திரு. என்.எஸ்.என். நடராஜ்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எண்ணெய் வித்துக்களுக்கு விதிக்கப்பட்டுள்ள 5 சதவிகித வரியைக் குறைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) எண்ணெய் வித்துக்களுக்கான 5 சதவிகித வரியைக் குறைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ் அவர்கள்.*

திரு. என்.எஸ்.என். நடராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மிகச் சிறந்த ஆட்சி செய்யும் அம்மா அவர்களை, தமிழகம் மற்றும் இந்தியாவைக் கூறுபோட்டு, பங்கு*